



# தேர்தல்கள் தொடர்பான சட்டங்களை (மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான சட்டங்களைத் தவிர்த்து) மீளாய்வு செய்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது குறித்த தமது முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பிப்பதற்கும், ப∴வ்ரல் இயக்கத்தால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள்

READ NOW

PAFFREL

WWW.PAFFREL.COM

2026-07-15

# தேர்தல்கள் தொடர்பான சட்டங்களை (மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான சட்டங்களைத் தவிர்த்து) மீளாய்வு செய்து பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும், அது குறித்த தமது முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் சமர்ப்பிப்பதற்கும், ப.்.வ்ரல் இயக்கத்தால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள்

**1. தன்னியக்க வாக்காளர் பதிவு**

1.1 அனைத்துப் பிரஜைகளையும் தேசிய எண்ணிமமுறை (டிஜிட்டல்) அடையாள அட்டை முறைமையுடன் இணைக்கும் செயன்முறையின் மூலம், தானியங்கி முறையில் அனைத்துப் பிரஜைகளும் வாக்காளர்களாக தகுதி பெறும் நிலையை ஏற்படுத்தி வருடாந்த வாக்காளர் பதிவு முறையை நீக்க முன்மொழியப்படுகிறது.

1.2 மேற்கூறிய முறையை அப்படியே வைத்துக்கொண்டு மக்களின் நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்கும், தானியங்கி வாக்காளரொருவராக மாறும் முறையில் பிரவேசிப்பதற்கு சிரமமுள்ள சமூகத்தினருக்கு (முதியோர் இல்லங்கள்/சிறுவர் இல்லங்கள்) கிராம அலுவலர் 5 அல்லது 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களின் வீடுகளுக்கோ அல்லது அவர்கள் வசிக்கும் இடங்களுக்கோ சென்று தேருநர்களைப் பதிவு செய்ய வேண்டும்.

1.3 குறித்த ஒரு வசிப்பிடம் அல்லது முகவரி இல்லாத சமூகத்தினருக்கு (தெலுங்கர்கள் மற்றும் யாசகர்கள் போன்ற), அத்தகைய சமூகத்தினர் வசிக்கும் பகுதிகளில் அவர்களுக்கு அருகிலுள்ள கிராம அலுவலர் அலுவலகத்தின் முகவரியை அவர்களின் முகவரியாகக் கருதி, அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையை வழங்கும் ஒரு முறைமை வகுக்கப்பட வேண்டும்.

1.4 தேருநர்களைப் பதிவுசெய்தல் தொடர்பாக, 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டம் செயல்வலுவிலுள்ளது. தேருநர் ஒருவராகப் பதிவு செய்வதற்கான அடிப்படைத் தகுதி வீட்டின் உரித்து அன்றி, பொதுவான வசிப்பிடமே. அதன்படி, வாடகைக் குடியிருப்பாளர்களின் வாக்குரிமைப் பாதுகாப்பை "அந்த வாடகைக் குடியிருப்பாளர்கள் வசிக்கும் பகுதியின்" சம்பந்தப்பட்ட கிராம அலுவலரின் பொறுப்பாகக் கருதுவதற்கு சட்டம் அமுல்படுத்தப்படுதல் வேண்டும்.

1.5 தேருநர்களைப் பதிவுசெய்யும் செயன்முறை வெளிப்படைத்தன்மையுடன் இடம்பெறுகின்றதா என்பதை ஆராய்வதற்காக ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் பிரதிநிதிகளை நியமிக்கும் வாய்ப்பு அரசியல் கட்சிகளுக்கு உள்ள போதிலும், பெரும்பாலான அரசியல் கட்சிகள் அவ்வாறு செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. அனைத்துப் பிரஜைகளையும் தேசிய டிஜிட்டல் அடையாள அட்டை முறைமையுடன் இணைப்பதன் மூலம், அவர்கள் தானாகவே தேருநர்களாகப் பதிவு செய்யத் தகுதி பெறும் அந்தஸ்து உருவாகும் வரை வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வுச் செயன்முறை செயற்படுத்தப்படும் என்பதால், இந்த செயன்முறை உரிய முறையில் இடம்பெறுகின்றதா என்பதை ஆராய அரசியல் கட்சிப் பிரதிநிதிகளைப் பெயர்குறிப்பதைக் கட்டாயமாக்குவதற்கான ஒரு வழிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

**2. மாற்று தேர்தல் முறையொன்றுக்கான தேவை**

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களில், ஏறத்தாழ இரண்டு மில்லியன் வாக்காளர்கள் வாக்கெடுப்பு நடைபெறும் தினத்தில் தமது வாக்கெடுப்பு நிலையத்திற்கு நேரில் சென்று வாக்களிக்க இயலாதவர்களாக உள்ளனர்.

இவர்களை இரண்டு வகையினராக வகுக்கலாம்:-

1. உள்நாட்டில் இருந்த போதிலும், நடைமுறைக் காரணங்களால் வாக்கெடுப்பு நடைபெறும் தினத்தில் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்ல இயலாதவர்களாக உள்ள நபர்கள்
2. உள்நாட்டில் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், பல்வேறு காரணங்களால் நாட்டிற்கு வெளியே இருக்கின்ற நபர்கள்

உள்நாட்டில் இருக்கின்ற போதிலும் வாக்கெடுப்பு நடைபெறும் தினத்தில் நடைமுறைக் காரணங்களால் வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்ல இயலாத நிலையிலுள்ள நபர்கள்.

2.1 வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தும், உடலியல் இயலாமை (உடல்நலக் குறைவு) அல்லது முதுமை காரணமாக வாக்கெடுப்பு நிலையத்திற்கு வந்து வாக்களிப்பதில் சிரமம் உள்ளவர்கள் என தேர்தல் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும் தேருநர்களுக்காக நடமாடும் வாக்கெடுப்பு நிலையங்களை நிறுவுதல். மேலும், முதுமை காரணமாக பயணிக்க இயலாத வாக்காளர்கள், தத்தமது பதிவுசெய்யப்பட்ட முகவரிக்குச் சென்று வாக்களிப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.

2.2 தேர்தல்/வாக்கெடுப்பு நடைபெறும் தினத்தில் தத்தமது கடமைகள் காரணமாக தமக்கு ஒதுக்கப்பட்ட வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க இயலாத வாக்காளர்களுக்கு மாற்று தேர்தல் முறையொன்றின் கீழ் வாக்களிப்பதற்கு வாய்ப்பளித்தல்.

தேர்தல்/வாக்கெடுப்பு நடைபெறும் தினத்தில் நாட்டில் இருந்துகொண்டு தங்களது வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க இயலாத வாக்காளர்களின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக, பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாற்று வாக்கெடுப்பு முறைகளைப் பயன்படுத்தலாம்.

- அஞ்சல் வாக்கெடுப்பு முறைகள்
- நடமாடும் வாக்கெடுப்பு முறைகள்
- இணையவழி வாக்கெடுப்பு முறைகள் (இலத்திரனியல்/மின்னணு வாக்கெடுப்பு) (e-Voting)
- பதிலாள் மூலம் வாக்களித்தல். (Proxy Voting)
- பணியிடங்களுக்கு அருகில் வாக்கெடுப்பு நிலையங்களை அமைத்தல்.

வாக்காளர்களாகப் பதிவுசெய்துள்ள போதிலும், தேர்தல்/வாக்கெடுப்பு நடைபெறும் தினத்தில் வாக்களிக்க இயலாத வாக்காளர்களுக்கு.

2.3.1 ஆரம்பமாக தேர்தல் முறையின் சுதந்திரமான மற்றும் நியாயமான தன்மையை உறுதி செய்வதற்கும், வெளிநாட்டுத் தொழிலாளர்களின் வாக்களிப்புச் செயன்முறையில் மக்களின் நம்பகத்தன்மையை உறுதிசெய்வதற்கும், வெளிநாட்டுத் தூதரக அலுவலகங்களை வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்தி அவர்களுக்கு வாக்களிக்கும் வாய்ப்பை வழங்குவதற்கும் ஒரு சூழலை உருவாக்குவது பொருத்தமானது என்று நான் முன்மொழிகின்றேன். வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் வாக்களிப்பதற்கு வழிவகை செய்வதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின்படி, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் பதிவுசெய்யப்பட்டுள்ள 17 நாடுகளின் தூதரகங்களில் இந்தச் செயன்முறையை ஆரம்பிக்கலாம்.

2.3.2 இரண்டாம் கட்டமாக, எதிர்காலத்தில், தேவைக்கேற்ப,

- அஞ்சல் மூலம் வாக்களித்தல்.
- நிகழ்நிலை முறையொன்றைப் பயன்படுத்துதல்.
- இணையவழி வாக்களிப்பு முறைகள் (e-Voting)

- பதிலாள் மூலம் வாக்களித்தல். (Proxy Voting)

போன்ற முறைகளுக்கும் வாய்ப்பளிக்க முடியும்.

**4. தேர்தல் செலவினங்களை மட்டுப்படுத்துதல்**

4.1 தற்போது செயல்வலுப்பெறும் 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து, அச்சட்டத்தை இற்றைப்படுத்துவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை வகுக்க வேண்டும்.

4.2 குறிப்பிட்ட தேதிக்குள் வருமானம் மற்றும் செலவின விபரத்திரட்டுகளைச் சமர்ப்பிக்கத் தவறும் வேட்பாளர்கள் அல்லது அரசியல் கட்சிகள் வழக்கு விசாரணையின்றி குற்றத் தீர்ப்பளித்து, தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்துதல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளித்தல்.

4.3 வேட்பாளர் ஒருவருக்கு குறிப்பிட்ட தேதிக்குள் வருமானம் மற்றும் செலவின விபரத்திரட்டுகளைச் சமர்ப்பிக்கத் தவறியதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நடைமுறைத் தடையேதும் இருப்பின், ஒரு வேட்பாளர் நீதிமன்றத்தில் தனது தரப்பில் விளக்கமளிக்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல்.

4.4 தேர்தலில் போட்டியிட எதிர்பார்க்கும் அரசியல் கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள் அல்லது வேட்பாளர்கள், வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய முன்னர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக ஒரு தனிவேறான கணக்கைப் பராமரிக்கவும், தேர்தல் தொடர்பான அனைத்து வருமானங்களையும் செலவினங்களையும் அந்தக் கணக்கின் மூலம் செய்யவும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருதல்.

4.5 ஒரு வேட்பாளருக்கு அல்லது அரசியல் கட்சிக்கு, ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய நிதிசார் அல்லது பொருள்சார் உதவியின் அளவு, ஒரு வேட்பாளரின் அல்லது கட்சியின் தேர்தல் செலவில் நூற்றுக்கு 5 சதவீதத்தை தாண்டாத விதத்தில் சட்டமியற்றப்படுதல் வேண்டும்.

4.6 பல வேட்பாளர்களும் அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கு முன்பிருந்தே தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதால், தேர்தல் காலப்பகுதிக்கான ஒரு குறிப்பிட்ட பொருள்கோடலை வழங்குதல்.

4.7 ஒரு தேர்தல்/வாக்கெடுப்பின் போது வேட்பாளர்களின் செலவுகளை மேற்பார்வை செய்யவும் கண்காணிக்கவும் தேர்தல் ஆணைக்குழுவின் கீழ் முழுமையான அதிகாரம் பொருந்திய ஓர் அலகை நிறுவுதல்.

4.8 வேட்பாளர்களின் செலவின வரம்புகள் தொடர்பான சட்டங்களை வேட்பாளர்களோ அல்லது அரசியல் கட்சிகளோ மீறும் சந்தர்ப்பத்தில் நீதிமன்றத்தை நாடுவதற்குத் தேவையான அதிகாரங்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்குதல்.

4.9 வேட்பாளர்களின் வருமானம் மற்றும் செலவின விபரத்திரட்டுகளை ஒவ்வொரு தேர்தலின் முடிவில் சமர்ப்பிப்பதற்குப் பதிலாக, நாளாந்த அடிப்படையில் இற்றைப்படுத்த ஒரு டிஜிட்டல் முறைமையையும் சட்டக் கட்டமைப்பையும் உருவாக்குல்.

4.10 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வருமானம் மற்றும் செலவின விபரத்திரட்டுகளை, குறைந்தபட்சம் ஒரு பட்டயக் கணக்காளரின் ஒப்புதலுடன் சமர்ப்பித்தல்.

4.11 அரசியல் கட்சிகளால் அல்லது வேட்பாளர்களால் சமர்ப்பிக்கப்படும் வருமானம் மற்றும் செலவின விபரத்திரட்டுகளில் சிக்கலான நிலைமைகள் எழும் போது, தேர்தல் ஆணைக்குழுவும் ஆர்வமுள்ள பிரசைகளும் சட்ட நடவடிக்கை எடுக்க அனுமதிக்கும் ஏற்பாடுகள் சட்டத்தில் உட்சேர்க்கப்பட வேண்டும்.

4.12 இந்தச் செயன்முறையைக் கண்காணிப்பதற்கு கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம், உண்ணாட்டு அரசிறைத் திணைக்களம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, சட்டத்துறை தலைமையதிபதி திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு கண்காணிப்புக் குழுவை நியமித்தல்.

**5. அரச அதிகாரம் மற்றும் அரச/பொதுச் சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்தல்.**

5.1 அரச அதிகாரம் மற்றும் அரச/பொதுச் சொத்து பற்றிய பொருள்வரையறை மிகவும் திட்டவட்டமானதாக இருக்க வேண்டும்.

5.2 குடியரசின் ஜனாதிபதி, பிரதம அமைச்சர் மற்றும் அமைச்சரவை அமைச்சர்கள், தங்கள் பதவிக்கு உரியதென்று வழங்கப்பட்ட வளங்களையும் அதிகாரத்தையும் தேர்தல் பிரசார நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் சட்டம் இயற்றுதல் (ஜனாதிபதி செயலகம், அரசியல் கூட்டங்கள், பாதுகாப்புப் படைகளுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர்கள், வாகனங்கள், அதிகாரிகள் போன்றவற்றைப் பயன்படுத்துதல் - அவ்வாறு பயன்படுத்துவதாயின், அதற்கென ஒரு குறிப்பிட்ட விலையை நிர்ணயித்து, அது குறித்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு தெரிவித்து, அதற்கான உரிய அனுமதியைப் பெறுவதற்கான ஒரு முறையையும், அதற்குப் பொருத்தமான சட்டக் கட்டமைப்பையும் உருவாக்குதல்).

5.3 தேர்தல்களின் போது வேட்பாளர்கள் அல்லது அரசியல் கட்சிகளை ஊக்கப்படுத்தும் நோக்கில், அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுதைத் தடுப்பதற்காக பொருத்தமான சட்டங்களை இயற்றுதலும் அவற்றை செயல்வலுப்படுத்தலும்.

5.4 தேர்தல் காலப்பகுதியில் ஓர் அரசியல் கட்சி/சுயேச்சைக் குழு அல்லது ஒரு வேட்பாளரை ஊக்கப்படுத்தும் நோக்கத்திற்காக, அரசாங்கம்/அரச கூட்டுத்தாபனம்/அரச அதிகாரசபைக்கு அல்லது அரசுடைமையான கம்பனிக்குச் சொந்தமான அசையா அல்லது அசையும் சொத்துக்களைப் பயன்படுத்துவதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுத்தல். (இச்செயல்களை சம்பந்தப்பட்ட சட்டங்களில் சட்டவிரோதமானவை எனக் குறிப்பிடுதல்).

5.5 ஓர் அரசியல் கட்சி/சுயேச்சைக் குழு அல்லது வேட்பாளரை ஊக்கப்படுத்தும் நோக்கத்திற்காக, அரச அலுவலர்களின் திறமை, அறிவு மற்றும் நேரம்/அரச ஆதனங்கள் (வாகனங்கள்/பிரசார சாதனங்கள்/ நிழற்படப் பிரதி எடுக்கும் இயந்திரங்கள்/ தொலைபேசிகள்) ஆகியன துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுத்தல் (இச்செயல்களை சம்பந்தப்பட்ட சட்டங்களில் சட்டவிரோதமானவை எனக் குறிப்பிடுதல்).

5.6 தேர்தல்/தேர்தல் பிரசாரத்திற்காக அரச நிறுவனங்கள்/ கூட்டுத்தாபனங்கள்/ அதிகாரசபைகள்/ அரசுடைமைக் கம்பனிகளுக்குச் சொந்தமான வளங்களை வழங்கும் போது, எந்தவொரு குழுவிற்கும் விசேட நலன் அல்லது பாதிப்பு ஏற்படாத விதத்தில் அவை நியாயமான அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.

**6. கொள்கைப் பிரகடனங்கள்**

6.1 ஒரு வேட்பாளர் அல்லது அரசியல் கட்சி, சம்பந்தப்பட்ட பதவிக்காலம்/அதிகாரபூர்வ காலத்தில் செயல்படுத்தக்கூடிய நடைமுறை மற்றும் குறிப்பிட்ட காலக்கெடுவுடன், தேர்தலுக்கு முன்னர் கொள்கைப் பிரகடனங்களைச் சமர்ப்பிப்பதை ஊக்குவித்தல் மற்றும் அதனை ஒரு முன் நிபந்தனையாகக் கருதி ஒழுங்குவிதிகளை மேற்கொள்ளல்.

6.2 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் அதே சந்தர்ப்பத்தில், கொள்கைப் பிரகடனங்களை தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து வெளியிடுதல் மற்றும் அதனை கட்சிச் செயலாளர் மற்றும் வேட்பாளரால் கையொப்பமிடப்பட்ட சட்டபூர்வ ஆவணமாக்குதல்.

6.3 ஜனாதிபதி பதவியேற்று இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னரும், மேற்சொன்ன கொள்கைப் பிரகடனங்களுக்கு அல்லது வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது உறுதிசெய்யப்பட்டால், அவர்களுக்கு எதிராக நம்பிக்கை மீறல், ஒப்பந்த மீறல் ஆகியவற்றுக்காக பிரஜைகளுக்கு நீதிமன்றம் செல்ல உரிமையை உரித்தாக்குதலும் கொள்கைகளை அமுல்படுத்திக் கொள்வதற்கு நீதிமன்ற உத்தரவொன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சட்டபூர்வ அதிகாரம் பொருந்திய ஓர் ஆவணமாக அதனை மாற்றுதலும்.

6.4 வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளால் வெளியிடப்படும் கொள்கைப் பிரகடனங்களுக்கு சட்டபூர்வ அடிப்படை வழங்கப்பட வேண்டும். மேலும் அவர்கள் சட்டபூர்வமாக வகைகூறுவதற்கு பொறுப்பேற்கச் செய்யப்பட வேண்டும்.

6.5 கொள்கைப் பிரகடனங்களை ஒழுங்குபடுத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவால் ஒரு செயன்முறை உருவாக்கப்பட வேண்டும்.

6.6 தேர்தலில் வெற்றிபெறும் வேட்பாளர்/அரசியல் கட்சியின் கொள்கைப் பிரகடனம், தேசிய கொள்கைக் கட்டமைப்பாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அத்துடன் அதன் செயலாக்கம் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கண்காணிக்கப்படக்கூடிய விதத்தில் முன்வைக்கப்பட வேண்டும்.

## 7. வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுதல்

7.1 தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளின்படி, தேர்தல் ஆணைக்குழு மிகவும் நுட்பமான காரணங்களுக்காக மட்டுமே (சம்பந்தப்பட்ட தேர்தல் சட்ட ஏற்பாடுகளின்படி) வேட்புமனுக்களை நிராகரிக்கிறது. இருப்பினும், வேட்பாளராக இருப்பது தொடர்பான எந்தவொரு சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையீனங்களைச் சரிபார்க்க சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்பட வேண்டும்.

உதாரணங்கள் -

- இரட்டைக் குடியுரிமையைச் சரிபார்க்க ஒரு வழிமுறையை உருவாக்குதல் (ஒவ்வொரு வேட்பாளரும் தான் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியிழப்பு செய்யப்படவில்லை என்று தனது வேட்புமனுப் பத்திரத்துடன் ஒரு சத்தியக் கடதாசியை வழங்க வேண்டும்)

7.2. 2025 உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலில், உள்ளூர் அதிகாரசபைகளில் மூன்றில் இரண்டு (2/3) பங்கில் குறைந்தபட்சம் ஒரு வேட்புமனுப் பத்திரமேனும் நிராகரிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. ஆகையால், வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணங்கள் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். மேலும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதைக் குறைக்கத் தேவையான திருத்தங்களைச் செய்யவும், நடைமுறையைத் தெளிவுபடுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

7.3 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படும் போது, அவை மீளமைக்கப்பட்டு, சமர்ப்பிப்பதற்கு 24 மணிநேர மேலதிக காலம் கிடைக்கின்றவாறு சட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

## 8. தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்களை விஸ்தரித்தல்

8.1 தேர்தல் ஆணைக்குழுவில் பணியாற்றும் அதிகாரிகளின் சுதந்திரம், நடுவுநிலைமை மற்றும் தொழில்சார் பாதுகாப்பைப் பேணுவதற்காக, அதனை ஒரு தனிச் சேவையாக நிறுவுதல்.

8.2 தேர்தல் ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களாக அல்லாமல், இலங்கைப் பிரசைகளாக இருப்பதை உறுதிசெய்யும் சட்டங்களை இயற்றுதல்.

8.3 தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மையையும் செயற்பாட்டையும் திறம்படச் செய்வதற்குத் தேவையான குறைபாடுகளைக் கண்டறிந்து, அவை தொடர்பான சட்டங்களை இயற்றுதல்.

8.4 ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் செல்வாக்கு இன்றி தேர்தல் திகதியை நிர்ணயிப்பதற்கும் தேர்தல்களை நடத்துவதற்கும் இன்றியமையாத காரணியான நிதிச் சுயாதீனத்தன்மையை வழங்குதல். இதற்காக, ஒவ்வொரு தேர்தலுக்கும் ஆண்டுதோறும் போதுமான நிதியைத் தேர்தல் ஆணைக்குழுவின் கணக்கிற்கு விடுவிப்பதற்கான ஒரு முறைமையை உருவாக்க சட்டப் பொறிமுறையொன்றைத் தயாரித்தல்.

8.5 தேர்தல்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் குறித்து விசாரித்த பின்னர் வழக்குகளைத் தாக்கல் செய்ய தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கும் சட்டங்களை இயற்றுதலும் வழக்குகள் தாக்கல் செய்யப்படாத சந்தர்ப்பங்களில், உரிய காரணங்களை உள்ளடக்கிய ஓர் அறிக்கையை வெளியிட தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரமளித்தலும்.

8.6 உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலைத் தொடர்ந்து நிறுவப்படும் உள்ளூர் அதிகாரசபைகள் தொடர்ச்சியாகவும் சுறுசுறுப்பாகவும் செயற்படுவதற்கு, அரசியல் கட்சிகளால் நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நியமிக்கப்பட வேண்டும். ஏதேனுமொரு காரணத்திற்காக, ஒரு அரசியல் கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ உரிய காலத்திற்குள் அதன் உறுப்பினர்களை நியமிக்கத் தவறும் பட்சத்தில், தகுதியான வேட்பாளர்களை நியமிக்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கும் வகையில் சட்டங்களை இயற்றுதல்.

8.7 ஓர் உள்ளூர் அதிகாரசபைகளின் தவிசாளர் அல்லது நகர முதல்வர் 3 மாதங்களுக்குள் தேர்ந்தெடுக்கப்படாத சந்தர்ப்பங்களில், அத்தகைய அதிகாரசபைகளைக் கலைத்து தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கும் சட்டங்களை இயற்றுதல்.

8.8 தேர்தல் கால அட்டவணை அமுலில் இல்லாத சந்தர்ப்பங்களில் தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பின்னர், அந்தச் செயன்முறைக்கான திகதி மற்றும் நேரத்தை (வேட்புமனுக் கோரல், தேர்தல் நாட்கள்) நிர்ணயிப்பதில் சுமார் ஒரு வார (7 நாட்கள்) கால அவகாசத்தை நீட்டிக்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்க வேண்டும். விசேடமாக கால இடைவெளிகள் குறித்து குறிப்பாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## 9. தேர்தல் கால அட்டவணை

9.1 ஒவ்வொரு தேர்தலையும் நடத்துவதற்கான கால வரம்பு சட்டத்தால் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதோடு தேர்தல் அல்லது வாக்கெடுப்பின் திகதியைத் தீர்மானிக்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கின்றவாறு சட்டம் இயற்றப்படுதல்.

9.2 நியதிச்சட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ள விதிவிலக்கான காரணங்களைத் தவிர, எந்தவொரு மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனத்தையும் உரிய பதவிக்காலம் முடிவதற்குள் கலைக்கும் சாத்தியக்கூறை ஒழித்தல்.

9.3 விதிவிலக்கான சூழ்நிலைகளைத் தவிர, மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கான தேர்தல்கள் நாடு முழுவதிலும் ஒரே நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்று சட்டங்களை இயற்றுதல்.

## 10. அரசியல் கட்சிகளின் பதிவு

10.1 ஓர் அரசியல் கட்சி, குறைந்தபட்சம் மூன்று தேர்தல் மாவட்டங்களில் ஒரு நிறுவன ரீதியான கட்டமைப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், குறைந்தபட்சம் ஆயிரம் அங்கத்தவர்களைக் கொண்டிருக்க வேண்டும் (இதற்காக அரசியல் கட்சி அங்கத்தவர்களின் கையொப்பங்கள் அடங்கிய இடாப்பொன்றைப் பயன்படுத்தலாம்) என்றும் கோரும் சட்டங்களை இயற்றுதல்.

**10.2 அரசியல் கட்சிப் பதிவை பல கட்டங்களில் நடத்துதல்.**

- பிராந்திய அரசியல் கட்சிகள் (பிராந்திய அடையாளங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு)
- மாகாண அரசியல் கட்சிகள்
- தேசிய அரசியல் கட்சிகள்

10.3 பதிவுக்குப் பின்னர் அரசியல் கட்சிகளை முறையாகக் கண்காணிக்க, அரசியல் கட்சிப் பதிவுச் சட்டத்தில் ஒரு செயன்முறையை அறிமுகப்படுத்துதல். கட்சிப் பதிவுச் சட்டத்தில் பதிவுக்குப் பிந்திய ஒரு முறையான கண்காணிப்பு செயன்முறையைச் சேர்க்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளித்தல்.

10.5 தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் ஆண்டுக்குரிய கணக்கு அறிக்கைகள், முக்கிய அலுவலர்களின் பெயர்ப் பட்டியல்கள், அந்த அலுவலர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய வெளிப்படுத்துகைகள் மற்றும் கட்சி யாப்புகளை வெளியிடுவதைக் கட்டாயமாக்கும் ஒரு சட்டத்தை இயற்றுதல்.

10.6 ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை இரத்து செய்ய தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளித்தல்.

10.7 தொடர்ச்சியாக மூன்று தேர்தல்களில் போட்டியிடாத அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை இரத்துச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.

10.8 வருடாந்த மாநாடுகளை நடத்தாத அரசியல் கட்சிகளின் பதிவை இரத்துச் செய்வதற்கான சட்டங்களை இயற்றுதல்.

10.9 அரசியல் கட்சிகளின் நிறைவேற்றுக் குழுக்களில் குறைந்தபட்சம் 30% பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் இல்லாத அரசியல் கட்சிகளின் பதிவை இரத்துச்செய்வதற்கான சட்டங்களை இயற்றுதல்.

10.10 ஒரு குறிப்பிட்ட அரசியல் சித்தாந்தத்தைக் கொண்ட ஒரு குழு, அந்த சித்தாந்தத்தைப் பிரதிநிதித்துவப்படுத்த அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்ய வாய்ப்பு பெற்றிருக்க வேண்டும் என்றபோதிலும், தனிப்பட்ட நலன்களை அடையும் நோக்கத்திற்காக அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைத் தடுக்கும் சட்டங்களை இயற்றுதல்.

**11. தேசியப் பட்டியல் மூலம் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்தல்**

தற்போதுள்ள தேர்தல் முறை மாற்றப்படாத சூழ்நிலையில் மட்டுமே இந்த முன்மொழிவு பொருத்தமானதாக இருக்கும்.

11.1 தேசியப் பட்டியல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 29 ஆக மட்டுப்படுத்தும் சட்டத்தைக் கொண்டுவருதல்.

11.2 பல்வேறு துறைகளில் அறிவு, நிபுணத்துவம் மற்றும் சிறப்பறிவு கொண்ட தகுதிவாய்ந்த நபர்கள், போதிய பிரதிநிதித்துவம் இல்லாத அல்லது குறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட

இன மற்றும் மதக் குழுக்கள் மற்றும் பிற குழுக்களின் பிரதிநிதிகள் மட்டுமே தேசியப் பட்டியலுக்குப் பரிந்துரைக்கப்படுவதை உறுதிசெய்யும் சட்டத்தை இயற்றுதல்.

11.3 ஒவ்வொரு கட்சியாலும் தேசியப் பட்டியலுக்குப் பரிந்துரைக்கப்படும் நபர்களின் கல்விநிலை, அவரது அறிவு மற்றும் அனுபவத் துறை அல்லது போதிய பிரதிநிதித்துவம் இல்லாத அல்லது குறைவாகப் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட குழு ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும். இதற்காகத் தேர்தல் ஆணைக்குழு ஒரு முறையான படிவத்தைச் சமர்ப்பித்தல்.

11.4 நிபுணத்துவம் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தும் மேற்படி குழுவுடன் கூடிய பெயர்ப்பட்டியல், வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் அதே நேரத்தில் வெளியிடப்படுதல். மேற்கண்ட தகுதிகளைப் பூர்த்தி செய்யும் தேசியப் பட்டியலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களின் பெயர்கள், வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் நேரத்தில் வெளியிடப்பட வேண்டும். மேலும், வேட்பாளர் எந்த நிபுணத்துவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்றும், ஏதேனும் சமூகம் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டால், அது எந்தச் சமூகம் என்றும் குறிப்பிடப்பட வேண்டும்.

11.5 பட்டியலில் காட்டப்பட்டுள்ள நபர்கள் மட்டுமே தேசியப் பட்டியலில் இடம்பெற வேண்டும். தோல்வியடைந்த வேட்பாளர்களோ அல்லது வேறு நபர்களோ எந்தக் காரணத்திற்காகவும் தேசியப் பட்டியலிலிருந்து நியமிக்கப்படக் கூடாது. தேசியப் பட்டியலில் ஏதேனும் நியமனம் செய்யப்பட்டால், அது போட்டியிடும் ஒவ்வொரு கட்சி/கூட்டணி அல்லது சுயேச்சைக் குழுவிற்கும் அதிகபட்சமாக மூன்று நபர்கள் அல்லது 30 சதவீதம் என்ற வரம்பிற்குள் இருக்க வேண்டும்.

11.6 தேசியப் பட்டியலில் மூன்றுக்கும் மேற்பட்ட இடங்களைக் கொண்டுள்ள கட்சிகள்/சுயேச்சைக் குழுக்கள், பட்டியலில் நான்காவது நபர் ஒரு பெண்ணாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதன்படி, பெண்கள் 4, 8, 12,.... என்றவாறு நியமிக்கப்படுவர்.

### 12. வேட்பாளர்களின் சுயவிவரக் குறிப்புகளைச் சமர்ப்பித்தல்

12.1 தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்யும் வேட்பாளர்கள், தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்படும் படிவத்திற்கு அமைய வேட்புமனு தாக்கல் செய்யும் நேரத்தில் தெரிவத்தாட்சி அலுவலரிடம் ஒரு சுயவிவரக் குறிப்பைச் சமர்ப்பிப்பதை கட்டாயமாக்குதல்.

12.2 அவ்வாறு வழங்கப்படும் தகவல்கள், பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில், வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி மற்றும் தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுதல்.

12.3 நீதிமன்ற நீதிபதிகள், பதவிநிலை அலுவலர்கள், இராணுவத்தின் உயரதிகாரிகள், பொலிஸ் சேவையில் உயரதிகாரிகள், கூட்டிணைக்கப்பட்ட சபைகளின் உயரதிகாரிகள், ஆணைக்குழுக்களின் உறுப்பினர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் வெளிக்கள அலுவலர்கள் உள்ளிட்ட, அரச் அதிகாரம், செல்வம் மற்றும் நலத்திட்ட நடவடிக்கைகளைக் கையாண்ட அலுவலர்கள், ஓய்வுபெற்ற அல்லது அப்பதவியிலிருந்து விலகிய பின்னர் 3 ஆண்டுகளுக்கு எந்தத் தேர்தலிலும் போட்டியிட முடியாது என்பதை உறுதிசெய்யும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

### 13. கட்சி மாறுதல்

13.1 இலங்கையில் வாக்காளர் கட்சிக்கே வாக்களிப்பதால், ஒரு வேட்பாளர் தனது கொள்கையின்படி தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிக்காக இனி பணியாற்ற முடியாவிட்டால், அவர் ஒரு சுயேச்சைப் பாராளுமன்ற உறுப்பினராக செயற்படுவதைத் தவிர வேறு வழியில் கட்சி மாற முடியாதவாறு சட்டம் இயற்றப்பட வேண்டும்.

13.2 ஆளுங்கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்கு மாறுவதன் காரணமாக ஒருவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கக் கூடாது. கட்சி மாறுவதன் காரணமாக அரசாங்க அதிகாரம் மாறுமாயின், அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெறிதாக்கப்பட வேண்டும்.

**14. மாற்றுத்திறனாளி வாக்காளர்களின் வாக்குரிமையைப் பாதுகாத்தல்**

14.1 நிரந்தர ஊனமுற்ற பிரஜைகளுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கும் போது, அவர்கள் விண்ணப்பித்தால், அவர்களின் ஊனத்தை அடையாளம் காணக்கூடிய விதத்தில் சின்னங்களுடன் கூடிய தேசிய அடையாள அட்டையை விநியோகித்தல்.

14.2 விழிப்புலனற்றோர் வாக்கெடுப்பு நிலையத்தில் நம்பகத்தன்மையுடனும் தடையின்றியும் வாக்களிக்க ஏதுவாக, பிரெயில் முறை அல்லது பிற தொழில்நுட்ப முறையொன்றை உருவாக்குதல்.

14.3 தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிவிப்புகளையும், வேட்பாளர்கள்/அரசியல் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட கொள்கைப் பிரகடனங்களையும் மும்மொழி, சைகை, பிரெயில் மற்றும் ஒலி ஊடகங்களில் சமர்ப்பித்தல்.

14.4 மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்கும் போது அவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்குதல் மற்றும் ஒரு உதவியாளருடன் வருவதைத் தடுக்கின்ற தற்போதைய சிக்கலான செயன்முறைக்குப் பதிலாக மிகவும் வசதியான ஒரு முறையைச் செயற்படுத்த சட்டமியற்றுதல்.

14.5 மாற்றுத்திறனாளிகள் எளிதில் அணுகக்கூடிய வாக்கெடுப்பு நிலையங்களை (Accessible Polling Stations) தயார் செய்யவும், பௌதிக வசதிகளை வலுப்படுத்தவும், அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலும் சக்கர நாற்காலியைப் பயன்படுத்துபவர்களுக்காக சரிவுப்பாதைகளை (ramps) அமைக்கவும் நடவடிக்கை எடுத்தல்.

14.6 விழிப்புலனற்ற பிரஜைகள் மற்றொரு நபரின் ஒத்தாசை இன்றி தாம் விரும்பும் வேட்பாளருக்குச் சுதந்திரமாக வாக்களிக்க ஏதுவாக அமைகின்ற விதத்தில், பிரெயில் அல்லது தொட்டுணரக்கூடிய வடிவங்களில் தயாரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுகளை (Tractile Ballot Templates) அறிமுகப்படுத்துவதன் மூலம் இரகசியத்தன்மையையும் சுயாதீனத்தன்மையையும் (Secrecy & Independence) பாதுகாத்தல்.

14.7 சக்கர நாற்காலியைப் பயன்படுத்துபவர்களும் மாற்றுத்திறனாளிகளும் எளிதாக வாக்களிக்க ஏதுவாக வாக்குச் சீட்டுப்பெட்டிகளை நிறுவுதல்.

14.8 சைகை மொழி மொழிபெயர்ப்பு (Sign Language)

(தேர்தல் காலத்தில் தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்படும் அதிகாரபூர்வ அறிவிப்புகள், வேட்பாளர்களின் தொலைக்காட்சி பிரசாரங்கள் மற்றும் தேர்தல் விவாதங்களில் சைகை மொழி மொழிபெயர்ப்பைக் கட்டாயமாக்குதல்.)

14.9 எளிதாக வாசிக்கக்கூடிய ஆவணங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்காக தேர்தல் சட்டங்களையும் வாக்களிக்கும் நடைமுறைகளையும் எளிய உருவக்குறிப்புகளிலும் எளிய மொழிநடையிலும் (Easy-to-read formats) வெளியிடுதல்.

14.10. தேர்தல் தினத்தன்று வேட்பாளர்கள்/அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களால், மாற்றுத்திறனாளிகளை வாகனங்களில் ஏற்றிச் செல்வது, அவர்களுக்கு செல்வாக்கு செலுத்துவது மற்றும் அவர்களுக்கு ஆதரவளிப்பது போன்ற தேர்தல் சட்ட மீறல்களுக்கான சாத்தியக்கூறுகளைக் குறைத்தல

14.11 பேச்சு மற்றும் செவித்திறன் குறைபாடு உள்ள நபர்களுடன் தொடர்புகொள்வதற்காக, வாக்கெடுப்பு நிலையத்தில் எளிய குறியீட்டுச் சின்னங்கள் மற்றும் படங்கள் அடங்கிய தகவல் அட்டைகளை (Communication Boards) வைத்தல்.

14.12 கை நடுக்கம் அல்லது விரல்களில் பலவீனம் (உதாரணம்: பக்கவாதம் அல்லது நரம்பியல் கோளாறுகள்) உள்ள பிரஜைகள் எளிதாக "X" குறியீட்டை இட வசதியாக, தடிப்பான இறப்பர் பிடியுடன் கூடிய பேனாவை (Easy Grip Pens) வாக்கெடுப்பு நிலையத்தில் வைத்தல்.

14.13 மாற்றுத்திறனாளிகள் சமூகத்தின் அரசியல் உரிமைகளை உறுதிசெய்தல்.

14.14. வேட்புமனுப் பட்டியல்கள்

அரசியல் கட்சிகளின் தேசியப் பட்டியல்களிலோ (National Lists) அல்லது பிராந்திய வேட்புமனுப் பட்டியல்களிலோ மாற்றுத்திறனாளிகளுக்கு குறிப்பிட்ட பிரதிநிதித்துவத்தை ஒதுக்கவும். (Quota System)

**15. பெண்கள் மற்றும் இளைஞர்களின் போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்தல்.**

15.1 உள்ளூர் அதிகார சபைகள், மாகாண சபைகள் மற்றும் பாராளுமன்றம் ஆகிய மூன்று நிறுவனங்களிலும் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவத்திற்கு குறைந்தபட்சம் 25 சதவீத ஒதுக்கீட்டை உறுதிசெய்ய சட்டமியற்றுதல்.

15.2 அரசியல் கட்சிகள் பதிவு செய்யப்படும் போது, அவற்றின் செயற்குழுக்களில் குறைந்தபட்சம் 30 சதவீதம் பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் இருப்பதை கட்டாயமாக்கும் வகையில் சட்டம் இயற்றுதல்.

15.3 30%க்கும் அதிகமான பெண் பிரதிநிதித்துவத்தை வழங்கும் கட்சிகளை ஊக்குவிப்பதற்காக சிறப்பு வசதிகளையும் சலுகைகளையும் வழங்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளித்தல். (அந்த வசதிகள் அல்லது சலுகைகள் குறிப்பாகக் குறிப்பிடப்பட வேண்டும் மற்றும் இதற்காக ஒரு முறையான செயன்முறை உருவாக்கப்பட வேண்டும்.)

**16. பிரசாரம் (இலத்திரனியல்/அச்சு) தொடர்பான சட்டங்கள்**

16.1 ஒரு தேர்தலின் போது ஊடக நிறுவனங்கள் தமது ஊடகப் பயன்பாட்டின் மூலம் வாக்காளர்களின் அபிப்பிராயத்தில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்துவதால், ஊடக நிறுவனங்களுக்கு இடையில் ஒரு சமநிலையைப் பேணுவதற்குத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கும் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

16.2 தேர்தல் காலப்பகுதியில் இலத்திரனியல் மற்றும் அச்சு சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக, தேர்தல் ஆணைக்குழுவின் கீழ் சுதந்திரமான மற்றும் முழு அதிகாரம் பெற்ற ஒரு கட்டமைப்பு நிறுவப்பட வேண்டும். (தேர்தல் ஆணைக்குழவால் வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டிநெறிகள் அமுல்படுத்தப்பட வேண்டும். மேலும், அத்தகைய வழிகாட்டிநெறிகளைப் புறக்கணிக்கும் ஊடக நிறுவனங்களுக்குத் தேர்தல் முடிவுகளை வெளியிடாமல் இருப்பது மற்றும் அதிகாரபூர்வ தகவல்களை வழங்குவதைத் தவிர்ப்பது போன்ற செயன்முறைகள் வகுக்கப்பட வேண்டும்.)

16.4 தேர்தல்கள் மற்றும் வாக்கெடுப்புகள் (ஜனாதிபதித் தேர்தல்கள், பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூரதிகார சபைகள்) தொடர்பான பிரசாரம் மற்றும் தேர்தல் பிரசாரக் காலம் குறித்த சட்ட ஏற்பாடுகளில் ஒருசீர்த்தன்மை இருக்க வேண்டும்.

16.5 தேர்தல்கள் ஆணையாளர் வேட்புமனுத் திகதி மற்றும் தேர்தல் திகதி தொடர்பான அறிவிப்பை வெளியிடும் போது, சம்பந்தப்பட்ட தேர்தலின் திகதியைக் குறிப்பிடும் வகையில் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

**17. தேர்தல் காலத்தில் சமூக ஊடகங்களின் பயன்பாடு**

17.1 தேர்தல் காலப்பகுதியில் சமூக ஊடகங்கள் ஊடாக தவறான தகவல்கள்/வெறுப்புப் பேச்சு பரவுவதையும், தகவல்கள் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதையும், தற்போதுள்ள தேர்தல் சட்டங்களை மீறி மேற்கொள்ளப்படும் பிரசாரங்களையும் தடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும்.

17.2 கைத்தொலைபேசி மற்றும் தரைவழி நிலையான தொலைபேசிகள் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ளாமல் இருப்பதை தொலைபேசி நிறுவனங்களின் பொறுப்பாக்கும் சட்டத்தை தேர்தல் பிரசாரச் சட்டம் உள்ளடக்க வேண்டும். இது தேர்தல் ஆணைக்குழவால் ஒழுங்குபடுத்தப்பட்டு, அதன் மீது வழக்குத் தொடரப்பட வேண்டும்.

- **செயற்கை நுண்ணறிவும் தேர்தல்களும்**

17.3 எதிர்வரும் தேர்தல்களில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி, வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்குப் பாரபட்சம் ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் வெறுப்புப் பேச்சு/தவறான தகவல்கள் பரப்பப்பட வாய்ப்புள்ளது. எனவே, ஒரு தேர்தல்/வாக்கெடுப்பின் சட்டபூர்வ தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு, இதுபோன்ற சூழ்நிலைகளைத் தடுக்க புதிய சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.

## 18. தேர்தல்/வாக்கெடுப்பு நிலைய சட்டமீறல்களுக்கான ஒரு முழுமையான நீதிமன்றம்

18.1 தேர்தல்/வாக்கெடுப்பு நிலைய சட்டமீறல்கள் மற்றும் தேர்தல்களின் செல்லுபடித்தன்மை குறித்து தாக்கல் செய்யப்படும் அனைத்து மனுக்களையும் விசாரித்துத் தீர்ப்பளிப்பதற்காக, மேன்முறையீட்டு நீதிமன்றம் அல்லது அதற்கு மேற்பட்ட நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட ஒரு முழுமையான நீதிமன்றத்தை நிறுவ வேண்டும்.

18.2 தேர்தல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் போது, குறைந்தபட்சம் ஒரு வருடத்திற்குள் முடிவுகளைப் பெறுவதற்கு ஏதுவாக சட்ட ஏற்பாடுகளைத் தயாரித்தல்.

## 19. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மீதான மட்டுப்பாடு

19.1 வெறும் புகழுக்காகவோ அல்லது தனிப்பட்ட ஆதாயத்திற்காகவோ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒரு நிலை காணப்படுவதாலும், அத்தகைய வேட்பாளர்கள் பொதுச் சொத்துக்களைப் பெருமளவில் வீணடிப்பதாலும், இந்த நிலைமை பொதுக் கருத்தைச் சிதைப்பதாலும், அத்தகைய வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். (அபராதங்களை அதிகரிப்பது போன்றவை) ஒரு குறிப்பிட்ட சித்தாந்தத்தைப் பிரபலப்படுத்தும் நோக்கில் போட்டியிடும் வேட்பாளர்களை ஊக்கமிழக்கச் செய்யாத ஒரு அமைப்பு அவர்களுக்கு ஏற்படுத்தப்பட வேண்டும்.

## 20. உள்ளூரதிகார சபைகள் சட்டத்தின் கீழ் நீதிமன்றத் தீர்ப்பொன்றின் மூலம் ஓர் உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படும் சந்தர்ப்பத்தில்,

உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 262 (பிரிவு 82 அ/ஆ இன் கீழ் தேர்தல் நீதிபதி அல்லது உயர்நீதிமன்றத்தால் தனக்கு அனுப்பப்பட்ட அறிக்கையைப் பெற்றவுடன், குடியரசின் ஜனாதிபதி அந்த அறிக்கையின் நகலை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயிக்க வேண்டும்.

## 21. மக்கள் பிரதிநிதிகளைத் திரும்ப அழைத்தல்

தேர்தல்களின்/வாக்கெடுப்புகளின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய அல்லது தங்கள் பதவிக்காலம் முடிவதற்குள் அவ்வாறு செய்வதில் போதுமான ஆர்வம் காட்டாத மக்கள் பிரதிநிதிகளைத் திரும்ப அழைப்பதற்குச் சட்டம் இயற்றப்பட வேண்டும். பதவிக்காலம் தொடங்கி இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் கொள்கைப் பிரகடனம் அல்லது

அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது உறுதிசெய்யப்பட்டால், ஒரு தீர்மானம் மூலமாகவோ அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கையொப்பங்களுடன் சமர்ப்பிக்கப்படும் ஒரு முன்மொழிவு மூலமாகவோ அல்லது தேர்தல் மனு மூலமாகவோ அவரைப் பதவியிலிருந்து நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இந்திய உள்ளூர் அதிகார மாதிரியமைப்பு – The Indian Local Level Model - இந்தியாவில் மத்திய பிரதேஷ் மற்றும் பீகார் போன்ற மாநிலங்களில் அமுல்படுத்தப்படும் இந்திய உள்ளூர் அதிகார மாதிரியமைப்பை, இலங்கையில் உள்ளூர் அதிகார அமைப்புகளின் உறுப்பினர்களைத் திரும்ப அழைப்பதற்கான (Recalling system) ஒரு தொடக்கமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

ஐக்கிய அமெரிக்க மாதிரியமைப்பு - - The UK Recall MP,s Act 2015 இலங்கையின் பாராளுமன்ற அமைப்பானது பிரித்தானிய வெஸ்ட்மின்ஸ்டர் அமைப்பை ஒத்ததாக இருப்பதால், 2015 இல் பிரித்தானியாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட அமைப்பு நமது நாட்டிற்கும் பொருத்தமானதா என்று நாம் பரீட்சித்துப் பார்க்கலாம்.

## 22. தேர்தல்/வாக்கெடுப்பு காலத்தில் அரசாங்க அலுவலர்களின் நியமனம், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு

அரசாங்க அமைச்சுக்கள், ஆணைக்குழுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூர் அதிகாரசபைகள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரச அதிகார சபைகள், அரச வங்கிகள், அரச பல்கலைக்கழகங்கள் போன்ற அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் தேர்தல் காலத்தில் செய்யப்படும் பதவி உயர்வுகள், நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் தொடர்பான குறிப்பான விதிகளை சம்பந்தப்பட்ட சட்டங்களில் உட்சேர்த்தல்.

## 23. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்துகைகள்

23.1 வேட்புமனுக்கள் தாக்கல்செய்யப்படும் சந்தர்ப்பத்தில் முறையாக தயாரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றிய வெளிப்படுத்துகைகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இந்த நோக்கத்திற்காக, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய சட்டத்தில் உள்ள வெளிப்படுத்துகை மாதிரிக்கு புறம்பாக புதிய ஒரு மாதிரி தேர்தல் ஆணைக்குழு அறிமுகப்படுத்த முடியும்.

23.2 அத்தகைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்துகைகள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் அல்லது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்துகையில் தவறான தகவல்கள் உட்சேர்க்கப்பட்டிருப்பது கண்டறியப்படும் பட்சத்தில், வேட்பாண்மை/ உறுப்பினர் பதவி வறிதாக வேண்டும்.

23.3 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்துகைகள் ஒரு பகிரங்க ஆவணமாக மாற வேண்டும் என்பதோடு அத்தகைய ஆவணங்களை வெளியிடுவது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

## 24. பொதுவான சட்டத் திருத்தங்கள்

24.1 தேர்தல் பிரசாரத்திற்கான ஓர் ஒழுக்கநெறிக்கோவை நிறுவப்பட வேண்டும்.

24.2 1981 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் 70ஆம் பிரிவுக்கு அமைய, பொதுக் கூட்டங்களை மட்டுப்படுத்தல் என்பதன் கீழ் தேர்தலுக்கு 48 மணி நேரத்திற்கு முன்பும், தேர்தல் முடிவடைந்து ஒரு வார காலத்திற்குப் பிறகும் பொதுக் கூட்டங்களை நடத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும், பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாதென்று குறிப்பிடப்படும் 48 மணி நேர காலகட்டத்தில் பிரதான வேட்பாளர்களின் இறுதிப் பேரணிகள் ஒளிபரப்பப்படுவதால், சட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படவில்லை என்று

தெரிகிறது. தற்போதைய நடைமுறையில், பிரசார நடவடிக்கைகள் இடம்பெறக்கூடாத 48 மணி நேர காலத்தினுள்ளும், அதற்கு முன்பு நடைபெற்ற இறுதிப் பேரணிகளின் தகவல்கள் அலைவரிசைகளில் செய்தியறிக்கைகள் மூலம் ஒளிரப்பு செய்யப்படுவதால், சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் எந்தக் காரணத்திற்காகவும் அத்தகைய ஒளிபரப்புகள் செய்யப்படக்கூடாது என்றொரு ஏற்பாட்டைச் சேர்க்க நாம் முன்மொழிகிறோம்.

24.3 உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயத்தின் 82க்கு) பிரிவின்படி தேர்தல் மனுவொன்றை வேட்பாளர் ஒருவருக்கு மாத்திரமே சமர்ப்பிக்க முடியும் என்ற பிரிவைத் திருத்தி வேட்பாளரொருவருக்கும் ஆர்வமுள்ள சாதாரண தரப்பினர் ஆகியோரை உள்ளடக்கும் வகையில் திருத்துதல்.

24.4 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 74ஆம் பிரிவில் உள்ள துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்கள் போன்றவை என்பதில் சமூக ஊடகங்கள், குறுஞ்செய்திகள் அல்லது அதுபோன்ற பிற முறைகள் மூலம் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களை உள்ளடக்குதல்.